<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 46/2022** நாள்: **25.09.2025** ம.சா.**2 –** காளிமுத்து

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3வது எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். விபத்தானது மாலை 4 முதல் 5 மணிக்கு நடந்தது. சம்பவம் நடக்கும் போது ஆத்துக்கிணத்துப்பட்டி பிரிவில் பேருந்துக்காக காத்திருந்தேன். இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள லாரியானது சம்பவ சமயத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து மேற்கு நோக்கி திரும்பியது. சம்பவ சமயத்தில் மேற்படி லாரியில் சிண்டெக்ஸ் டேங்கு மற்றும் அதை வைப்பதற்கான ஸ்டாண்டு ஆகியவை ஏற்றப்பட்டிருந்தது. மேற்படி டேங்கில் 4 முதல் 5 நபர்கள் இருந்தார்கள். சாட்சி தற்போது டேங்கில் உட்காரவில்லை, லாரியில் இருந்தார்கள் என்று கூறுகிறார். அது எந்த நிறுவன தயாரிப்பு லாரி என்ற விவரம் என்று எனக்கு தெரியாது. வேப்பமரம் தார் ரோட்டில் இருந்து சுமார் 30 அடி தூரத்தில் இருந்தது. நான் விபத்தை சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் சரிதான். லாரி சாலையில் திரும்பும் போது மெதுவாக தான் திரும்பியது என்றால் சரியல்ல, வேகமாக தான் திரும்பியது. விபத்து சமயத்தில் லாரி போய் வேப்பமரத்தில் இடித்துவிட்டது. வேப்ப மரக்கிளை ஸ்டாண்டில் இடித்துவிட்டது. பின்பு ஸ்டாண்டை லாரியில்

பிடித்துக்கொண்டிருந்த நபர்கள் மீது ஸ்டாண்டு விழுந்துவிட்டது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை. மனுதாரர்கள் கேட்டுகொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.